ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2431/11 - 2025 අප්‍රේල් මස 08 වැනි අඟහරුවාදා - 2025.04.08

*2431/11 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 99 ஆம் உறுப்புரையின் (13) (ஆ) உப உறுப்புரையின் கீழ் வெற்றிடமொன்றை நிரப்புதல்**

இலக்கம் 22 – கேகாலை தேர்தல் மாவட்டத்திற்காக 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 62 ஆம் பிரிவின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட்ட திரு. ஹப்பு ஆரச்சிகே கோசல நுவன் ஜயவீர அவர்கள் இறப்பெய்தியமையின் காரணமாக பத்தாவது பாராளுமன்றத்தின் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளதென்று, மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 64 (1) ஆம் பிரிவின் கீழ் பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளமையினாலும்;

அரசியலமைப்பின் 99 (13) (ஆ) உப உறுப்புரையின் கீழான ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த வெற்றிடத்தை நிரப்புமாறு அந்தப் பாராளுமன்ற உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64 (1) ஆம் பிரிவின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால் பணிப்பு விடுக்கப்பட்டுள்ளமையினாலும்;

தெரிவத்தாட்சி அலுவலர் அரசியலமைப்பின் 99 (13) (ஆ) உப உறுப்புரைக்கமைய மற்றும் 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64 (2) ஆம் உறுப்புரையின் கீழ் நடவடிக்கை மேற்கொண்டு அந்த தேர்தல் மாவட்டத்திற்கான பாராளுமன்ற உறுப்பினரொருவராக **திரு. ரத்னாயக்க முதியன்சேலாகே சமந்த ரனசிங்ஹ** என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென வெளிப்படுத்தி, மேற்கூறப்பட்ட சட்டத்தின் முதலாம் அட்டவணையில் “க” எனும் படிவத்திலான விபரத்திரட்டை சமர்ப்பித்துள்ளமையினாலும்;

1A - G 44155 — 374 (2025/04)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64 (2) ஆம் பிரிவினால் தேர்தல் ஆணைக்குழுவிற்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து மேற்கூறப்பட்ட* **திரு. ஹப்பு ஆரச்சிகே கோசல நுவன் ஜயவீர** *அவர்கள் இறப்பெய்தியமையின் காரணமாக ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்காக இலக்கம் 22 கேகாலை தேர்தல் மாவட்டத்திற்கான பத்தாவது பாராளுமன்றத்தின் உறுப்பினர் ஒருவராக திரு. ரத்னாயக்க முதியன்சேலாகே சமந்த ரனசிங்ஹ என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென தேர்தல் ஆணைக்குழுவினால் இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.*

**ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க,**
*தவிசாளர்,*
*தேர்தல் ஆணைக்குழு.*

**எம்.ஏ.பீ.சீ.பெரேரா,**
*உறுப்பினர்,*
*தேர்தல் ஆணைக்குழு.*

**அமீர் பாயிஸ்,**
*உறுப்பினர்,*
*தேர்தல் ஆணைக்குழு.*

**ஏ. சண்முகநாதன்,**
*உறுப்பினர்,*
*தேர்தல் ஆணைக்குழு.*

**பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்க,**
*உறுப்பினர்,*
*தேர்தல் ஆணைக்குழு.*

தேர்தல் ஆணைக்குழு,
இராஜகிரிய,
*2025, ஏப்ரல் 08 ஆந் திகதி.*

EOG *04-0056*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*